6354/2
Bahasa
Tamil
Kertas 2
Ogos / September
2024

2 ¼ Jam

**MAJLIS PENGETUA SEKOLAH MENENGAH MALAYSIA**
**CAWANGAN NEGERI SEMBILAN**

**PROGRAM PENINGKATAN AKADEMIK TINGKATAN LIMA**
**SEKOLAH - SEKOLAH NEGERI SEMBILAN 2024**

# BAHASA TAMIL

**Kertas 2**

Dua Jam Lima Belas Minit

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. *Kertas soalan in mengandungi* **22** *soalan.*
2. *Jawab* **semua** *soalan.*
3. *Jawapan anda hendaklah ditulis pada kertas jawapan.*

Kertas soalan ini mengandungi 14 halaman bercetak



6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)

[30 புள்ளி]

கீழ்க்காணும் கருத்துப்படத்தைக் கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.


1. கீழ்க்காணும் கருத்துப்படம் உணர்த்தும் உட்கருத்து யாது?




[2 புள்ளி]


6354/2 © 2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan

2. கீழ்க்காணும் உரைவீச்சு உணர்த்தும் படிப்பினை யாது?



லாரி நிறைய மரம்
இரையுடன் கூட்டைத்தேடும்
தாய்க்குருவி...

இணையம்

[2 புள்ளி]

3. கீழ்க்காணும் கூற்று உணர்த்தவரும் **அறிவுரை** யாது?

தேவையற்ற பொருட்களை நீ வாங்கிக்கொண்டே இருந்தால், சீக்கிரத்தில் உனக்குத் தேவையான பொருட்களை விற்க வேண்டியிருக்கும்....

- வாரன் பஃபெட்

[2 புள்ளி]

[Lihat halaman sebelah

4. கீழ்க்காணும் நகைச்சுவை துணுக்கில் கணவன் கூறிய பதில் எதனை உணர்த்துகிறது?



| | |
|---|---|
| மனைவி | : தீபாவளிக்கு என்ன பட்டுச் சேலை வாங்கிக் கொடுப்பீங்க? |
| கணவன் | : ..........??? |
| மனைவி | : காஞ்சி பட்டா அல்லது பனராஸ் பட்டா? |
| கணவன் | : இரண்டும் இல்லை. கடன் பட்டு. |
| மனைவி | : ...................???? |

[2 புள்ளி]

5. சுவர்ப்பந்து வீராங்கனை சிவசங்கரி சுப்ரமணியத்தின் சாதனைக்கு வழிவகுத்த **இரண்டு பண்புகள்** யாவை?

**மலேசிய சுவர்ப்பந்து வீராங்கனை சிவசங்கரி சுப்ரமணியம்**

சுவர்ப்பந்து வீராங்கனை சிவசங்கரி கெடா, சுங்கை பட்டாணியில் சுப்ரமணியம் வள்ளி ஆகியோருக்கு 24 ஜனவரி 1999இல் பிறந்தார். தனது எட்டாவது அகவையில் இருந்து சுவர்ப்பந்து விளையாட்டில் ஈடுபடலானார். இவர் 2022இல் வாகன விபத்தில் சிக்கியதால் விளையாட்டுப் போட்டியில் இருந்து விலக வேண்டியிருந்தது. மீண்டும் சுவர்ப்பந்து போட்டியில் பங்கேற்க இயலுமா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் 1 ஏப்ரல் 2024இல் இலண்டனில் நடைபெற்ற பி.எஸ்.ஏ உலகச் சுற்றுக் *கிளாசிக்* இறுதி போட்டியில் உலகத் தர வரிசையில் இரண்டாம் நிலையில் உள்ள கனியா எல் அமாமி என்னும் எகிப்திய வீராங்கனையைத் தோற்கடித்துத் தங்கத்தை வென்றார். சிவசங்கரியின் சாதனையை அங்கீகரித்து, இவருக்கு 'தி வேல்ட் கேம்ஸ்' என்ற அமைப்பு ஏப்ரல் 2024இல் 'தடகள வீராங்கனை' என்ற பட்டத்தை வழங்கியது.

[2 புள்ளி]

[Lihat halaman sebelah

6. முனைவர் ஆறு.நாகப்பன் இந்நாட்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு **ஆற்றிய பணிகள்** இரண்டனை எழுதுக.

**முனைவர் ஆறு. நாகப்பன்**

மலேசியத் தமிழ்க்கூறு நல்லுலகம் மறக்க முடியாதவர்களுள் முனைவர் ஆறு. நாகப்பனும் ஒருவர் என்றால் அது மிகையாகாது. நீலாய் வட்டாரத்தில் ஒரு தோட்டத்தில் பிறந்து வளர்ந்த அவர் தமிழாசிரியராய்த் தன் பணியைத் தொடங்கி கல்லூரியின் விரிவுரைஞராய் நிறைவு செய்தார். தமிழ்மொழியிலும் மலாய் மொழியிலும் ஆழ்ந்த புலமையுடையவர். தற்கால இலக்கியமும் பக்தி இலக்கியமும் இவரது துறைகளாகும். சாந்தி என்ற இலக்கிய வார இதழின் வழி தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தோள் கொடுத்தவர். கோணல் ஆறு, கம்பிமேல் நடக்கிறார்கள் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை வழங்கி இந்நாட்டில் தமிழ் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். சக்திக்குப் பிறகு இவர் சிவனருள் என்ற மாத பக்தி இதழின் வழி சைவ சமய நெறிகளையும் பக்தி இலக்கியத்தையும் இந்நாட்டில் தொடர்ந்து வளர்த்து வருவது போற்றுதற்குரியதாகும்.

[2 புள்ளி]



6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப்பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவு முதன்மையானது. உலக உயிர்கள் அனைத்தும் உணவின்றி உயிர் வாழ்வதில்லை. உண்ணப்படுவது அனைத்தும் உணவு ஆகாது. உடல் நலமுள்ளவனுக்கு உணவாகப் பயன்படும் 'கஞ்சி' நோயுற்றவனுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. எனவே, உண்ணப்படுவனவெல்லாம் உணவாகா என்பதை எளிதில் உணரலாம். வாய் வழியாக உட்கொள்ளப்பட்டு, உயிர் வாழ்வதற்கும், உடல் நலத்திற்கும் தீங்கு விளைவிக்காத இன்றியமையாத பொருளாக அமைவதை உணவென்று கூறலாம்.

உணவு என்பது வெறும் உயிர் வாழ்வதற்கு மட்டும் அல்லாமல் அஃது ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக்குட்பட்ட ஒன்றாகவும் அமைந்துவிடுகிறது. ஒவ்வொரு இனத்தவரும் தனித்தனியே உணவுப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருப்பதை நாம் இங்குக் காணலாம். இத்தகைய உணவுப் பழக்க வழக்கங்கள் அந்தந்தச் சமுதாயத்தில், பண்பாட்டை அடியொற்றியே அமைந்துள்ளன. அதனால்தான் தொல்காப்பியரும், 'தெய்வம் உணாவே மாமரம் புள் பறை' என்ற நூற்பாவில் தெய்வத்திற்கு அடுத்த நிலையில் உணவை வைத்திருக்கிறார்.

தமிழரின் உணவுப் பழக்கவழக்கங்கள் நிலத்தின் தன்மையை ஒட்டியே அமைந்திருந்தன என்பதை நாம் காண முடிகிறது. வாழ்வுச் சூழல், நில அமைப்பு இவற்றைக் கொண்டே உணவு முறைகளும் அமைந்திருந்தன. இதனால்தான் குறிஞ்சி நிலத்திற்குரிய உணவுப்பொருள் நெய்தல் நிலத்தில் கிடைத்ததில்லை. நெய்தல் நிலத்தில் உள்ள உணவுப்பொருள் குறிஞ்சி நிலத்தில் கிடைப்பதில்லை. ஒவ்வொரு நிலத்தின் தன்மைக்கேற்ப இவை அமைந்திருந்தன. மலையும் மலை சார்ந்த பகுதியில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் திணை, ஐவனம், மூங்கில் நெல், கிழங்குகள், பால், ஊனுணவு ஆகியவற்றை உணவாகக் கொண்டனர். காடும் காடு சார்ந்த முல்லை நில மக்கள் ஆநிரைகளைக் கொண்டு கிடைக்கும் பால். தயிர், நெய் ஆகியவற்றோடு வரகு அரிசி, கிழங்கு வகைகள், ஊனுணவு போன்ற பிற உணவுகளையும் உண்டனர். வயலும் வயல் சார்ந்த மருத நில மக்கள் செல்வச்செழிப்புக் கொண்டவர்கள். ஆதலால், சோற்றுணவு, பாலுணவு, ஊனுணவு ஆகியவற்றை உண்டனர். கடலும் கடல் சார்ந்த நெய்தல் நில மக்கள் முக்கிய உணவாக மீனை உண்டனர். மணலும் மணல் சார்ந்த பகுதியில் வாழ்ந்த பாலை நிலத்து மக்கள் வேட்டையில் கிடைக்கும் விலங்குகளை உணவாகக் கொண்டனர்.

சங்க கால மக்களின் உணவுகளைப் பற்றிக் குறிப்பிடும் தேவநேயப்பாவாணர், "உலகில் முதன் முதலில் உணவை நாகரீகமாய்ச் சமைத்து உண்டவன் தமிழனே!


6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

ஏனைய நாட்டாரெல்லாம் தம் நாட்டில் விளைந்த உணவுப் பொருட்களைப் பச்சையாகவும், சுட்டும், வெறுமையாக அவித்தும் உண்டு வந்த காலத்தில் உணவைச் சோறும் கறியும் என இரண்டாக வகுத்து உண்டு வந்த பெருமை தமிழனதாகும்" என்று கூறுகிறார். அதேபோல் உணவைத் தான் மட்டும் உண்ணாது அனைவருக்கும் பகிர்ந்துண்ணும் உயரிய பழக்கத்தைக் தமிழர்கள் கொண்டிருந்தனர்.

ஆகவே, நம்முடையை இலக்கியச் சான்றுகளை ஆராய்கிறபோது தமிழர்களின் உணவு தயாரிக்கும் முறைகளிலும் உணவு உண்பதிலும் உணவைப் பிறருக்கு விருந்தோம்புவதிலும் மிகச் சிறப்பாக இருந்தனர் என்பதை நாம் காணமுடிகிறது. பண்டைய தமிழர்கள் உணவுகள் சார்ந்து அதன் **தன்மையினை** உணர்ந்து இயற்கையோடு வாழ்ந்துள்ளனர். ஆனால், இன்று நாகரீகம் என்ற போர்வையில் இன்றைய தலைமுறை மெல்ல மெல்ல தமிழர் உணவுப் பண்பாட்டினை மறந்து மேற்கத்திய உணவுப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்பது வேதனைக்குரியது.

- தமிழர் உணவு
சே.நமசிவாயம்
(சில மாற்றங்களுடன்)

7 உணவு என்றால் என்ன? [2 *புள்ளி*]

8 (அ) தமிழர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் எதனை ஒட்டி அமைந்திருந்தன? [2 *புள்ளி*]

(ஆ) தமிழர்களின் உணவுப் பழக்கத்தின் சிறப்புகள் யாவை? [2 *புள்ளி*]

9 கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்குச் சூழலுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

| |
|---|
| பண்டைய தமிழர்கள் உணவுகள் சார்ந்து அதன் **தன்மையினை** உணர்ந்து இயற்கையோடு வாழ்ந்துள்ளனர். |

[2 *புள்ளி*]

10 தமிழர்களின் உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்காவிட்டால் ஏற்படும் ஐந்து **விளைவுகளை** 50 சொற்களில் ஒரு பத்தியில் எழுதுக. [10 *புள்ளி*]



6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

Join SPM Study Group
https://spmpaper.me/group

**பிரிவு ஆ : கருத்துணர்தல் [படைப்பிலக்கியம்]**
**[30 புள்ளி]**

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

பொழுது புலர்ந்தாலும் கண்மணிக்கு என்னமோ இன்னும் விடியவில்லை. இரவு தொடங்கி விடிய விடிய முழுவதும் ஒரு சொட்டுத் தூக்கம்கூட இல்லை. மனப்போராட்டம் அழையா விருந்தாளி ஆகிவிட்டது. ஒன்னே ஒன்னு; கண்ணே கண்ணு போன்ற தன் ஒரே செல்லப்பிள்ளை தமிழருவியை முதல்நாள் பள்ளியில் சேர்க்கவேண்டும். சிக்கல் என்னவென்றால் முதல் நாள் பள்ளியில் தமிழருவியைச் சேர்ப்பது குறித்து அல்ல; கடந்த ஒருவாரமாக முதலாம் ஆண்டில் எந்தப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று தன் கணவனுடன் ஏற்பட்ட தர்க்கம்தான். ஏற்கனவே பதிந்திருந்த தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புவது குறித்து இருவருக்கும் போராட்டம் தொடங்கியது.

“தோ... பாரு... கண்மணி... நான் சொன்னா சொன்னதுதான். நம்ம வீட்டுப் பக்கத்திலேயே நடந்துபோகும் தூரத்திலேயே பள்ளி இருக்கு; பிறகு உனக்கென்ன பிரச்சனை? வேனுல தினசரி பத்து கிலோமீட்டரில இருக்குற தமிழ்ப்பள்ளிக்குத்தான் அனுப்பனும்னு ஒத்தக்காலுல நிக்கிற. வேன் செலவுவேற. பொண்ண பக்கத்துலேயே அனுப்பி கவனமா நீயே பார்த்துக்கலாம் தானே. பிறகு எதற்கு அடம் பிடிக்கிறே?”

“நான் சொல்றத கொஞ்சம் பொறுமையா கேட்குறீங்களா? நமது மொழி, இலக்கியம், கலை, கலாச்சாரம், பண்பாடு, சமயம் எல்லாத்தையும் நம்ப பொண்ணு நல்லா கரைச்சுக் குடிக்கனும்னுதான் அவளுக்குத் தமிழருவின்னே அடம்பிடிச்சு இந்தப் பெயர வச்சேன். நீங்க என்னடான்னா மகிஷா, திரிஷா, வேஷிகா என்று ஸ்டைல் ஸ்டைலா பேரு வைக்கனும்னு துள்ளிக் குதிச்சீங்க... ஆனால்... இந்தப் பெயர்களோட உண்மைப்பொருளை எல்லாம் எடுத்துச் சொன்னப்பிறகுதான் என் வழிக்கே வந்தீங்க.”

“அதெல்லாம் சரிதான் கண்மணி, பேரு விசயத்துல நான் உன் வழிக்கு வந்துட்டேன்ல. இந்த முதலாம் ஆண்டு தொடக்கப்பள்ளி விசயத்துல மட்டும் நான் இறங்கிப்போவதாய் இல்லை. நான் வேலை செய்யுற இடத்துலகூட எனக்குத் தெரிஞ்சவங்க எல்லாருமே பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளியில போடல. வேற பள்ளியிலத்தான் படிக்க வச்சிருக்காங்க. அங்க படிச்சாத்தான் இடைநிலைப்பள்ளிக்குப் போன பிறகு பிள்ளைகள் சரளமாவும் துணிச்சலாவும் மலாயும் இங்கிலீசும் பேசுறாங்களாம். எதிர்காலத்துல வேல வாய்ப்பும் சிக்கல் இருக்காதாம். பேசிக்கிறாங்க.”



6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

"என்னங்க நீங்க.... தமிழ்ப்பள்ளியில படிக்கிற பிள்ளைகளால இடைநிலைப்பள்ளிக்குப் போனபிறகு மலாயும் இங்கிலீசும் நல்லா பேசமுடியாதுன்னு யார் சொன்னது? இது நம்புற மாதிரியே இல்லைங்க... அவுங்க சொன்னா உடனே உண்மையாகிவிடுமா? என்னாலும் சான்று சொல்லமுடியும். ஆனால், நான் எந்தப் பள்ளியையும் குறைத்துச் சொல்ல இங்க வரல. நம்ப பொண்ண தமிழ்ப்பள்ளிக்குத்தான் அனுப்பனும்; என்ன சரிங்களா?" என மறுமொழி கூறிய கண்மணியைக் **கோபக்கனலில் எரிப்பதுபோன்று** பார்த்தான் அவள் கணவன். இப்படியே வாக்குவாதம் முற்றி உச்சத்துக்குப் போகும் தருணத்தில்....

"அத்தே... அத்தே..." என்ற குரலோடு கண்மணியின் அண்ணன் மகளும் கண்மணியின் அண்ணன் அண்ணியும் வீட்டினுள் நுழைந்தனர். "வாங்க அண்ணா... அண்ணி... என்ன விசயம் திடீரென்று... ஒருவார்த்தைகூட சொல்லாம வந்து இருக்கீங்க?"

"அதுவா கண்மணி... அபிநயாவைக் கல்வி அமைச்சு அடுத்தவாரம் நியுடெல்லிக்கு அனுப்புது. ஆங்கிலப் பேச்சுப் போட்டியில நம்ம நாட்டைப் பிரதிநிதிச்சுப் போறா... அதான் உங்க ரெண்டு பேர்கிட்டேயும் ஒருவார்த்தை சொல்லிட்டு ஆசிர்வாதம் வாங்க கூட்டிக்கிட்டு வந்தேன்...நம்ம நாட்டுல நடந்த எல்லா தொடக்கப்பள்ளிகளுக்கு இடையிலான பேச்சுப்போட்டியிலும் மாவட்டம், மாநிலம், தேசியம் எல்லாவற்றிலும் வெற்றி பெற்று இன்னிக்கு அவ படிச்ச தமிழ்ப்பள்ளிக்கும் நமக்கும் பெருமை சேர்த்திருக்கா...கண்மணி... உனக்கு ஞாபகம் இருக்கா? அபிநயாவ முதலாம் ஆண்டு தமிழ்ப்பள்ளியில சேர்க்கக்கூடாது என நான் அடம்பிடிச்சபோது நீயும் உங்க அண்ணனும் தானே தமிழ்ப்பள்ளியில சேருங்கன்னு எடுத்துச் சொன்னீங்க.. அத நான் மறப்பேனா... இவ வெற்றியில உனக்கும் பங்குண்டு கண்மணி" என்று சொல்லி முடித்தாள் கண்மணியின் அண்ணி.

"ரொம்ப பெருமையா இருக்கு... பிள்ளைக்கும் உங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்..." அபிநயாவை ஆசிர்வதித்துத் தனது மைத்துனனை ஆரத்தழுவி வாழ்த்துத் தெரிவித்தான் கண்மணியின் கணவன்.

அந்நேரம்... தொலைக்காட்சி செய்தி இரண்டில் உலக அறிவியல் விஞ்ஞானிகளின் பட்டியலில் இவ்வாண்டு பெயர் பொறித்தார் சுங்கை திங்கி தோட்டத் தமிழ்ப்பள்ளியின் முன்னாள் மாணவர் பேராசிரியர் ரமேஷ் சுப்ரமணியம் என்ற அறிவிப்பு ஒளிபரப்பானது.

தன் கணவனின் முகத்தைப் பார்த்தாள் கண்மணி. நாளை தமிழருவியைத் தமிழ்ப்பள்ளியில் முதலாம் ஆண்டில் சேர்ப்பதற்குத் தன்னோடு தன் கணவரும் உடன்வருவார் என்ற நம்பிக்கை பிறந்தது.

- நம்பிக்கை
புதினன்
*(எடுத்தாளப்பட்டது)*



6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

11. கண்மணியின் மனப்போராட்டத்திற்கான காரணம் யாது? [2 புள்ளி]

12. (அ) கண்மணியின் கணவன் தன் மகளை வேற்றுமொழி ஆரம்பப் பள்ளிக்கு அனுப்புவதற்கான காரணம் இரண்டனை எழுதுக. [4 புள்ளி]

(ஆ) கண்மணியின் பண்புநலன்களுள் இரண்டனை அவை வெளிப்படும் சம்பவத்தோடு விளக்குக. [4 புள்ளி]

13. (அ) கீழ்க்காணும் சொற்றொடரின் சூழலுக்கேற்ற பொருளை எழுதுக.

**கோபக்கனலில் எரிப்பது போன்று**

[2 புள்ளி]

(ஆ) கண்மணியின் கணவன் தன் மகளைத் தமிழ்ப்பள்ளியில் சேர்ப்பதற்கு உடன் வருவாரா? ஏன்? [4 புள்ளி]

14. இச்சிறுகதையின் வழி பெறக்கூடிய **படிப்பினைகள்** இரண்டனை எழுதுக. [4 புள்ளி]

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிபரப்பட்டியலை வாசித்து, அதன் கருத்துகளைத் **தொகுத்து** எழுதுக.

**<u>படிவம் ஐந்து மாணவர்களின் சமூக வலைதளப் பயன்பாடு</u>**

| சமூக வலைதளங்கள் | எண்ணிக்கை (விழுக்காடு) |
|---|---|
| புலனம் | 40 |
| தொலைவரி | 27 |
| வலையொளி | 15 |
| படவரி | 15 |
| முகநூல் | 3 |

*மூலம்: புக்கிட் புத்ரா இடைநிலைப்பள்ளி*

[10 புள்ளி]

[Lihat halaman sebelah



6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

## பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்
[20 புள்ளி]

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16 பின்வரும் மொழியணிகளைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**அ. ஒத்துப் பாடுதல்**

[2 புள்ளி]

**ஆ. யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல**

[2 புள்ளி]

17 அ. கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளுக்கேற்ற பொருளை எழுதுக.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் (605)

[2 புள்ளி]

ஆ. கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற பழமொழியை எழுதுக.

கவலைமிக்க மனத்தை உடையவரின் உடல் சோர்வடைவதால் ஒரு செயலை முனைப்புடன் செய்ய இயலாது. ஆகவே, மனக்கவலை உடையவர் வலுவிழந்தவராகவே கருதப்படுவார்.

[2 புள்ளி]

18 கீழ்க்காணும் செய்யுளடிகளின் பொருளை எழுதுக.

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே – சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

குறுந்தொகை (அன்பின் பெருமை)

[4 புள்ளி]

[Lihat halaman sebelah

19 *கீழ்க்காணும் சூழலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் பொருத்தமான மொழியணிகளை எழுதுக.* **சூழலை மீண்டும் எழுத வேண்டாம்.**

(அ) முக்குளிப்பு வீராங்கனை பண்டெலேலா ரீனோங் முதன் முதலாக 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட போது அவருக்கு 27ஆவது இடம்தான் கிடைத்தது. ஆனால், 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அவர் வெள்ளிப்பதக்கம் வென்றார். இதற்குக் காரணம் அவர் வாழ்க்கையில் தான் நினைத்ததை அடைய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதேயாகும். **(I பழமொழி)**

(ஆ) தமிழிலக்கிய வானில் பேரொளி வீசும் கவிஞர் கம்பர். 'கம்பர் பிறந்த தமிழ்நாடு' என்று தமிழ்நாட்டிற்குப் பெருமை தந்த புலவராகப் பாரதியாரால் பாராட்டப்பெற்றவர் கம்பர். மற்ற நூல்களைவிட கம்பரின் புகழைக் காப்பது கம்பராமாயணமே ஆகும். தமிழ்ச் சொற்களின் ஓசைவளத்தையும் பொருள்வளத்தையும் தம் பாடல்களில் நன்றாகப் பயன்படுத்தி வெற்றி கண்டவர் கம்பர். அதனால்தான், கம்பர் தன்னிகரற்ற பெருங்கவிஞராகத் தமிழ் இலக்கிய உலகில் விளங்கி வருகின்றார். **(II இணைமொழி)**

(இ) 2023ஆம் ஆண்டில் நாடு முழுவதும் ஏறக்குறைய முப்பத்து ஐந்தாயிரம் இணைய மோசடி சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக உள்துறை துணை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதனால், நூறு கோடிக்கும் மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. தொலைத் தொடர்புக் குற்றச் செயல்களான ஏமாற்றுக் குறுஞ்செய்தி போட்டிகள், போலி அழைப்புகள், ஆள்மாறாட்ட அழைப்புகள் அதிகளவில் நிகழ்ந்து மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். **(III மரபுத்தொடர்)**

(ஈ) இரு புருவங்களுக்கு மத்தியில் உள்ள இடம் நெற்றிப் பொட்டு என அழைக்கப்படுகின்றது. மருத்துவ ஆராய்ச்சிகளின்படி நினைவாற்றலுக்கும் சிந்திக்கும் திறனுக்கும் உரிய இடம் அதுவேயாகும். நெற்றியில் இடும் திலகம், அந்தப் பகுதியைக் குளிர்விக்கின்றது. மேலும், உடலின் சக்தி வெளியேறி விரயமாவதைத் தடுக்கின்றது. எனவே, புருவ மத்தியில் பொட்டு வைப்பது பெண்களின் அழகை மேலும் மெருக்கூட்டுகின்றது. **(IV உவமைத்தொடர்)**

[8 புள்ளி]

## பிரிவு ஈ : இலக்கணம்

[20 புள்ளி]

**கேள்விகள் 20 முதல் 22 வரை**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) சேர்த்தெழுதுக.

(i) சிறுமை + ஊர்

(ii) தெற்கு + நாடு

(iii) ஞான + உதயம்

[3 புள்ளி]

(ஆ) கீழ்க்காணும் வாக்கியங்களில் காணப்படும் முற்றியலுகரச் சொற்களை அடையாளங்கண்டு எழுதுக.

(i) பொது மக்களின் நலன் கருதி பிரதமர் பல திட்டங்களை அறிவித்தார்.

(ii) ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அணு உலை பாதிக்கப்பட்டது.

(iii) குடல் நோயால் பாதிக்கப்பட்ட அப்பர் இறைவனை வேண்டி பதிகம் பாடினார்.

[3 புள்ளி]

(இ) சொற்குவியலிலுள்ள **வடசொற்களைத்** தெரிவு செய்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| **அக்கறை** | **ஆஸ்தி** | **அனுபவம்** | **ஆபத்து** | **விவாகம்** |

[2 புள்ளி]

21 கீழ்க்காணும் கலவை வாக்கியத்தில் காணப்படும் **முதன்மை வாக்கியத்தை** எழுதுக.

| |
|---|
| **மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற வேண்டும் என்றால், அவர்கள் பாடங்களைச் சிரத்தையுடன் படிக்க வேண்டும்.** |

[2 புள்ளி]



6354/2 © *2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan*

22 கீழ்க்காணும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள பிழைகளை அடையாளங்கண்டு அதைச் சரிபடுத்தி எழுதுக.
*(வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம். நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்.)*

(i) கபிலன் திருக்குறளின் முழுபொருளையும் மனனம் செய்து கூறினான்.
(ii) பச்சை புற்களின் மீது படர்ந்திருந்த பனி சூரிய ஒளியில் மறைந்தது.
(iii) தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் தமிழ் இலக்கியங்களைத் தேடி சென்று சேகரித்தார்.
(iv) பாரதியார் இயற்றியக் கவிதைகள் மக்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.
(v) மாலைச் சூடிய மணமக்கள் பெற்றோரைத் தொழுது ஆசி பெற்றனர்.

[10 புள்ளி]

**தேர்வுத்தாள் முற்றுப் பெற்றது**
**KERTAS PEPERIKSAAN TAMAT**

6354/2 © 2024 Hak Cipta MPSMNS Negeri Sembilan